# மாதர் மனோரஞ்சினி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.

VOL. 2. | . MADRAS: NOVEMBER 1900. | No. 9.

புத்த. உ. | சென்னபட்டணம், 1900 - ஹு நவம்பர்-மீ. | இல. கூ.


## திலகவதியம்மையார்,

பல்வள மலருந் திருமுனைப்பாடி பண்புடனோங்குற நாளு
நல்வள நிறையும் புகழனார் தமக்கு நற்றிருமகளெனப் பிறந்து
சொல்வள நிலைக்கத் தன்னையே மணப்பத் துணிந்தவருயிர் துறந்ததனால்
இல்வள நிறையு மணந்தனை நீக்கி யிருந்தவென்னம்மை தாள்போற்றி.

தென் தேசத்திலே **திருமுனைப்பாடி** என்பதாக ஒரு நாடு இருக்கின்றது. அந்நாடு தருமநெறி தவறாது ஒழுகும் குடிகளையும், உச்சியில் சந்திரன் தவழும் பல மண்டபங்களையுமுடைய பல ஊர்களையும் உடைத்தாயிருக்கிறது. அந்நாட்டில் **பெண்ணையாறானது** குறிஞ்சி நிலத்திலிருக்கும் பல இரத்தினங்களையும், முல்லை நிலத்தில் மணம் வீசிக்கொண்டிருக்கும் பல மலர்களையும், தன் அலைகளாகிய கைகளால் வாரி தான் செல்லும் மார்க்கத்தின் இருபக்கங்களிலுமுள்ள வயல்களில் எறிந்து நிலவளப்பத்தை யுண்டு பண்ணிக்கொண்டு செல்லும்.

இவ்விதம் பெண்ணையாறானது நிலவளம் பெருகச் செல்வதால், நீர் பாய்ச்சும் கால்வாய்களில், வரால் மீன்கள் துள்ளித் துள்ளிப்பாயும். கரும்புகள் கணுக்களிலிருந்து இடையறாமல் தேனைச்சொரியும். வயல்கள் செழுமையான செந்நெற்பயிர்களைப் போகந்தவறாமல் கொடுக்கும். விசாலமான இடங்களிலுள்ள கமுகமரங்கள் பல குலைகளைத் தள்ளிக்கொண்டிருக்கும். எற்றச்சால்களில் நீரை மொள்ளுந்தோறும் முத்துகள் நிறைந்துவரும். குளங்களில் செங்கழுநீர்ப் புட்பங்கள் மலர்ந்து பார்ப்பவர் கண்ணுக்கு ஆநந்தத்தை விளைக்கும். அந்நாட்டில் உள்ள பெண்கள் மேல்வீடுகளில் இருந்து, தங்கள் கூந்தலுக்கு ஊட்டும் அகிற்புகையானது ஆகாயத்தில் எப்போதும் மேகம்போலத் திரண்டு நிற்கும். அந்நாட்டிலுள்ள குடிகள் யாவரும், வீடுகள்தோறும் வாயலின் முன்புறத்தில் நின்றுகொண்டு,

விருந்து உண்ணவரப்பட்ட விருந்தினர்களையும், அதிதிகளையும், இனிய முகங்காட்டி அழைத்து அமுதிட்டு உபசரித்து அனுப்புவார்கள்.

அந்நாட்டில் உள்ள ஊர்கள்தோறும் பள்ளர்கள் வயல்களில் துண்டித்த கரும்புகளின் அடித்துண்டுகளிலிருந்து வரும் சாறானது, அங்கங்கு மரங்களில் கட்டியிருக்கும் தேன்கூண்டுகள் உடைந்து ஒழுகும் தேனுடன் கலந்து, பிறகு வயல்களுக்குப் பாய்ச்சும் நீரோடுசேர்ந்து வயல்களில் போய்ப்பாயும். மருதநிலத்திலேயுள்ள கருவாழைக்குலைகள் துதிக்கையையுடைய யானைகளின் முகத்தைப்போல விளங்குவதையும், பக்கங்களில் வளரும் செந்நெற்கதிர்கள் தலை சாய்ந்து குதிரைகளின் முகத்தைப்போன்றிருப்பதையும், பெரிய பண்டிகளெல்லாம் ரதங்களைப்போல அவைகளின் வடிவங்களைக் காட்டிக்கொண்டிருப்பதையும், பள்ளர்கள் வயல்களில் இடும் கூச்சல் படைவீரர்களுடைய ஆரவாரத்தைப்போல கேட்டுக்கொண்டிருப்பதையும் பார்த்தால் அந்நாட்டில் நால்வகைச்சேனைகள் நெருங்கியுள்ளன போலப் புலப்படும்.

அம்மருதநிலத்திலுள்ள கமுக மரங்கள் பெண்ணையாற்றின் நீர்வளப்பத்தினால் பழங்களையும், காய்களையும், பாளைகளையும், பச்சோலைகளையும் உடைமையால் முத்துமுதலிய நவமணிகளையுமணிந்த பெண்கள், தங்கள் அளகபாரத்தைப் பொறுக்காமல் தலையைச் சாய்த்துக்கொண்டிருப்பன போல விளங்கிக்கொண்டிருக்கும். அப்பெண்ணையாற்றிலுள்ள வரால்மீன்கள் கன்றுபோல துள்ளி மடிகளைமுட்டுதலால் எருமைகள் பாலைச்சொரிந்து நீந்துவது கடல் நீரைக்குடிக்கப்போகும் மேகங்கள்போல விளங்கும்.

அந்நாட்டின் ஊர்களில் உள்ள சோலைகளின் உச்சியில் வண்டுக்கூட்டங்கள் நீலமணியாற்செய்த வளையல்கள்போல தேனையுண்ண ரீங்காரம் செய்துகொண்டு பறப்பதையும், செழுமையான இளந்தளிர்களின் முனையில் பூவரும்புகள் இருப்பதையும் பார்த்தால், பூமிதேவியானவள் தன் அழகைப் பார்க்கும்படி சந்திரனாகிய கண்ணாடியை தன் கைகளாற்பிடித்திருப்பதுபோல விளங்கும். வளம்பொருந்திய அந்நாடுமுழுவதும், களங்களில் உயர்ந்திருக்கும் நெற்கூடுகளிலும், மாதர்கள் நெருங்கியிருக்கும் மாடங்களிலும், மயிற்கூட்டங்களும், முகிற்கூட்டங்களும் ஒன்றோடொன்று வேற்றுமையின்றி ஆடிக்கொண்டிருக்கும்.

இவ்வகைத்தானபல வளங்களும் முழுதும் நிறைந்து விளங்குவதான **அத்திருமுனைப்பாடி** நாட்டில் **திருவாமூர்** என்னும் ஓர் ஊர் உண்டு. அவ்வூரில் வாழும், பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் நாற்பெருங்குடிகளில் கடைசியாகச் சொல்லப்பட்ட சூத்திரருள் வெள்ளாளர் மரபிலே

பண்டு தொடங்கி பெருமை வாய்ந்துவராநின்ற குறுக்கையர் குடியில் பெருந்தன்மையை யுடைவராயும், எத்திக்குகளிலும் தன் புகழ்பரந்து விளங்கும்படியாகவும், வாழ்ந்துவந்த **புகழனார்** என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பெருமைவாய்ந்த தன் மரபிலேயே கற்பிற்சிறந்த மாதினியார் என்னும் பெண்ணரசியை மணம்புரிந்து நாள்தோறும் விருந்தினர்களையும், அதிதிகளையும் சிறிதும் வழுவின்றி உபசரித்து அன்னமிட்டு "மருவியகாதன் மனையாளுந்தானும், இருவரும் பூண் டீர்ப்பினல்லால்—ஒருவரால், இல்வாழ்க்கையென்னு மியல்புடையவான் சகடம், செல்லாது தெற்றிற்று நின்று" என்பதற்கிணங்க புகழனாரும், மாதினியாரும் உடல் இரண்டு உயிர் ஒன்றுமாக ஒருமன்பட்டு இல்லற தருமத்தை நெறிதவறாது நடத்தி வாழ்ந்துவந்தார்கள்.

இப்படி வாழ்ந்துவரும் நாளில், **மாதினியார்** கருப்பமடைந்து, பத்து திங்களுஞ்சென்று கற்பிற்சிறந்த ஓர் பெண்ணரசியைப் பெற்றருளினார். தன் மனைவியாராகிய மாதினியார் பெண் மகவையீன்ற நற்செய்தியைக் கேட்ட **புகழனார்** தமக்கு அருங்குமாரத்தி அவதாரஞ்செய்த ஆநந்தத்தினால் பிராமணர்கள், அதிதிகள், ஏழைகள் முதலியவர்களுக்கு பொன்னும், ஆடையும், போஜனமும் அளித்து மகிழ்ந்ததுடன் பந்துக்கள், சிநேகிதர்கள் யாவருக்கும் சர்க்கரை வழங்கி தன் அரும்பெறற் குமாரத்திக்கு **திலகவதியம்மையார்** என நாமகரணம் செய்து கொண்டாடினார். மாதினியார் திலகவதியம்மாளை ஸ்நானஞ்செய்வித்து உயர்ந்த வஸ்திரத்தினால் ஜலத்தைப்போக்கி நெற்றியில் மண்திலகமிட்டும், கண்ணுக்கு கருமைதீட்டியும், காலுக்குபொன்னாலாய தண்டைசதங்கைமுதலியன பூட்டியும், அழகிய மார்பில் புலிநகஞ்சேர்ந்த முத்தாரத்தையணிந்தும், தலையில் சந்திரபிறை சூரியபிறையுடன் நெற்றிச் சுட்டியுமலங்கரித்தும், திருஷ்டிபோக்கும் பொருள்களைக்கொண்டு திருஷ்டிகழித்தும், பவளத்தினால் கால்களமைத்த பொன் தொட்டிலில் வளர்த்தி தாலாட்டி கண்வளரச்செய்து நீதியோடு அரசுபுரியும் அரசன் உலகை ஆதரிப்பதுபோல நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கவளர்ந்து திலகவதியம்மையார் பேதைப்பருவம் நீங்கி பெதும்பைப் பருவத்தை யடைந்தார்கள்.

இவ்வண்ணம் **திலகவதியம்மையார்** வளர்ந்துவரும் நாளில், **மாதினியம்**மாளுடைய மணிவயிற்றில், வேதாகமங்களில் கூறும் தருமங்கள் விருத்தியடைந்து அதருமங்கள் அழியவும், அகோராத்திரம் தவஞ்செய்வோர்களுடைய ஆசாரம் மேம்பாடடையவும், உலகிலுள்ள அஞ்ஞானவிருள் நீங்கி

மெய்ஞ்ஞான ஒளி பிரகாசிக்கவும் * மருணீக்கயாரென்னும் பெயர் வாய்ந்த ஒரு புத்திரர் அவதாரஞ் செய்தார். இது நிற்க,

திலகவதியம்மையாருக்கு பன்னிரண்டு வயதாகி மணப்பருவம் மருவியிருந்தகாலத்தில், புகழனுருடைய குடிக்கும் குலத்துக்கும் ஒத்தவராயும், சிவபத்தியில் மிகச்சிறந்தவராயும், அவ்வூர் அரசனிடத்தில் சைனியாதிபதியாயுமிருந்த கலிப்பகையாரென்பார் ஒருவர் அவ்வூரில் வசித்துக்கொண்டிருந்தார். அவர் புகழனுருடைய புத்திரியாகிய இத்திலகவதியம்மையாரை மணஞ்செய்துகொள்ள விருப்பமுள்ளவராய், சில முதியோர்களை அழைத்து, புகழனிடம்போய் அவருடைய குமாரத்தியை தனக்கு மணம் பேசும்படி அவ்விடம் அனுப்பினர். அம்முதியோர்கள் புகழனிடம் சென்று, கலிப்பகையார் தங்கள் குமாரத்தியை கலியாணஞ் செய்துகொள்ள மனமுள்ளவராய் எங்களை தங்களிடம் மகட்பேச அனுப்பினர் என்று சொன்னர்கள்; அதற்குப் புகழனர், அவர்களிடம், கலிப்பகையாருடைய குலம்கோத்திரம் முதலிய எல்லா விஷயங்களையும் நன்முய் விசாரித்துக்கொண்ட பிறகு அக்கலிப்பகையாருடைய இஷ்டப்படி தன்னருமபுதல்வியை விவாகம் செய்து கொடுக்க இஷ்டமுடையவனு யிருக்கிறேனென்று பதில் சொல்லி அவர்களை அனுப்பினர். அவர்கள் கலிப்பகையாரிடம் போய் புகழனர் கலியாணத்தின்பொருட்டு மனமிசைந்ததை தெரிவித்தார்கள்.

இது இப்படியிருக்க சில தினங்கள் சென்று கலிப்பகையார் தம்முடைய அரசனது ஆஞ்ஞையை மேற்கொண்டு சேனைகளோடும் வடதேசத்தரசர்மீது யுத்தம் செய்யப்போனர். அவர் வடதேசத்திலே யுத்தஞ்செய்துகொண்டிருக்கும் போது, திலகவதியம்மையாருடைய தகப்பனராகிய புகழனர் காலகதியால் தேகவியோகமாய் விட்டார். அவருடைய மனைவியாராகிய மாதினியாரும் அவருடன் உடன்கட்டையேறி மடிந்தார்கள். பிறகு திலகவதியம்மையாரும், மருணீக்கியாரும் தங்கள் தாய் தந்தையர்களுடைய பிரிவாற்றுமையினல் மிகவும் வருந்தி, தங்களுடைய சுற்றத்தார்களின் உபசாரவார்த்தைகளினுல் ஒருவீறு மனந்தேறி, தங்கள் தாய் தந்தையர்களுக்குச் செய்யவேண்டிய அந்திய சடங்களைச் செய்து முடித்தார்கள்.

இங்கே இப்படி நடந்திருக்க "பட்டகாலிலேபடும் கெட்டகுடியே கெடும்" என்பதுபோல, வடதேசத்தரசர் மீது படையெடுத்துச் சென்ற கலிப்பகையாரும் அநேக நாள் அவர்களுடன் சண்டைசெய்து, அவர்களை

---

* இப்பிள்ளைத் திருநாமமுடைய மருணீக்கியார் தாம் சைவசமயத்திலே ஆசாரியஸ்வாமிகளாய் விளங்கும் நால்வர்களில், ஸ்ரீமத் அப்பர்சுவாமிகள் என்பவர். இவருடைய சரித்திரத்தை திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தில் பார்த்தால் நன்கு விளங்கும்.

வெல்லமுடியாமல் யுத்தகளத்திலே இறந்து வீரசொர்க்கமடைந்தார். இந்த சங்கதியை யறிந்த திலகவதியம்மையார் முன்னிலும் பதின்மடங்கு விசன மடைந்து என்னுடைய மாதாபிதாக்கள் அவருக்கு என்னை கலியாணஞ் செய்துகொடுக்க மனம் ஒப்பியிருந்தமையால் என்னுடைய உடல், பொருள், ஆவி மூன்றும் அவருக்கே சொந்தமாய் விட்டது. ஆகையால் நானும் இறந்துபோகிறேனென்று இறக்கத் துணிந்திருந்தார்கள். அது கண்ட மருணீக்கியார் திலகவதியம்மையாருடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து "அடியேன் நம்முடைய மாதாபிதாக்கள் உயிர் துறந்த பின் உம்மையே அவர்களாகப் பாவித்தல்லவோ நான் உயிரை வைத்துக்கொண்டிருக்கிறேன். நீரும் என்னைத் தனியாகவிட்டு இறந்துபோவீராயின் நான் உமக்கு முன்னமே உயிரைவிட்டுவிட நிச்சயித்திருக்கிறேன்" என்று சொன்னார். இதனைச் செவியேற்ற திலகவதியம்மையார் தமது தம்பியார் உயிர் தாங்கியிருக்கவேண்டுமென்னும் அவாவால் தமது எண்ணத்தை நீக்கி உயிர்தாங்கி மற்றெவரையும் கலியாணம் செய்துகொள்ள மனமில்லாமல் வெறுத்து, ஜீவகாருண்ணியம், ஈஸ்வரபக்தி, திருப்பணி செய்தல் முதலியவைகளில் மனமுள்ளவராய் வீட்டிலேயே அரியதவஞ் செய்து கொண்டிருந்தார்கள்.

(இன்னும் வரும்.)

---

## இந்துப்பெண்களின் கல்வியுணர்ச்சி.

### ஓர் சம்பாஷணை.

கிரு.—இதில் மிக முக்கியமான புதுமைகள் சிலதுண்டு, அதாவது இதுபோன்ற குரூரசட்டம் விதிக்கும் பெரியோர்களை மீறுமலும் தனது பால்ய மனைவியிடத்துத் தனக்குள்ள அன்பை மறந்தும் வெளியிடத் துணிவில்லாமலும் அல்லது அம்மனைவிக்கு எவ்வித ஆறுதலையும் உண்டுபண்ணத் தற்சுதந்திரம் வாய்க்கப்பெறுமலும் கட்டுப்பட்டு நடக்கும் விவகார தசையை யடைந்த புத்திரசிகாமணிகளே இவர்களின் ஆண்மையும் அறிவும் எத்தகையவோ? கூறவஞ்சுதும், அன்றியுமிப்பால்ய தம்பதிகள் சந்திக்கவேண்டுமாயின் தாய், தமக்கை அல்லது வயது முதிர்ந்து வீட்டுச்சுதந்திரமுடைய வேறு மாதர்கள், இத்தகையாரின் தயாவிஷயமான அநுமதியே கிடைக்கவேண்டும். அவ்வித அநுமதி இவர்களால் கேட்டுக்கிடைப்பதல்ல. அவர்களுக்கே கருணைபிறந்து கிடைக்கவேண்டியதுதான், அத்தகைய அநாகரீகம் நடைபெற்றுவரும் குடும்பங்களை இன்றைக்கும் நாளைக்கும் தென்னாட்டில் வெகு எளிதில் காணலாம். இப்படிப்பட்ட மானக்கேட்டிற்கும் உட்பட்டு ஒடுங்கி நடக்கும் ஆண்மகன் வேறு பிறகொடுமைகளைச்

சகித்தல் அரிதாகுமோ? மற்றத்தருணங்களில் எப்பொழுதாயினும் தப்பித்தவறி அம்மாது தன் புருஷனிடத்தில் வசனிப்பதை மாமிவகையரா கண்டால், இம்மங்கைக்கு நேரும் விபத்துக்களும் கொடுமொழிகளும் எட்டிலடங்கா. மேலும் இவள் உலகில் எவரும் செய்யத்துணியாத துணிகரமான வொருசெய்கையைச் செய்தவளாகவே எண்ணப்படுவாளென்ப திற்றடையில்லை. இவ்வாறு சுயேச்சைபெய்தாது நிர்ப்பந்தமான வாழ்க்கை புரிய நேரும் சதிபதிகட்குப் பிறக்கும் பிள்ளைகள் எவ்வாறு மனோதைரியம், மெலிவின்மை, எழில், காத்திரம் முதலிய குணங்களோடு தோன்றும்? களிப்பின்மையாலும் சதா மனத்தில், முதியோர் மாட்டுள்ள அச்சத்தாலும் மெய்யும் மெலிந்து மனமுஞ்சோர்ந்து அறிவுங்கலங்கி அல்லற்படும் தாய் தந்தையரேயன்றோ தத்தம் சிசுக்களின் சீர்கேட்டிற்குங் காரணமாகின்றனர். இத்தகையதாகவே எல்லாவிடங்களிலுமிருக்கின்றதாகவுங் கொள்ளுதல் கூடாது. சிறுபான்மை இதற்கு நேர்விரோதமாய் மாமிமார்க்குப் படியளந்து வேறு படுத்திவிட்டு, சிறிதும் பெரியோரென்னும் மதிப்பின்றி அடக்கமற்று அரக்கியர்போல் கெட்ட பெயரெடுக்கும் சிற்சில பெண்களுமிருக்கக் காணலாம். ஆனால் இந்தத்தினுசு வடதேசத்தில் தான் நடைபெறுமென்பதிற் றடையில்லை. இவ்விரண்டுமன்றி அன்னியோன்னியமும் வாஞ்சையும் ஒருவர்க்கொருவரமைந்து வாழுங்குடும்பம் ஆயிரத்திலொன்றிருக்கவுங் கண்டிருக்கிறேன். இதுவன்றி தாய்விட்டார் சீர் சரியாயெடுக்கவில்லையென்று சிறுமைக்குட்படுத்தப்படும் சிறுமியர் இருதேசத்திலும் உண்டென்பது அநுபவமுடையோர்க்கு விளங்காதவிஷயமன்று, இப்பொழுதுதான் விவாக நிச்சயம் செய்யும்பொழுதே பிள்ளைவீட்டுக்காரர், தங்களுடைய ரயில்செலவென்றும், வழிச்செலவென்றும், போசனச் செலவென்றும், தாம்பூலச் செலவென்றும், போர்வைத்து பற்பல கைச்செலவுகளும் பெண்ணையீன்றவன் ஒத்துக்கொடுக்கவேண்டுமென்றும், பல்லக்குஜோடிப்பென்றும் பந்தல் அஸ்மான்கிரியென்றும், பாத்திரவகை இன்னின்னதென்றும், பட்சணவகை இன்னினவென்றும் பணப்பை இத்தனையென்றும், பஞ்சபாத்திரம் உருத்தாணி இவ்வளவு உயரமென்றும், வைரக்கடுக்கன் தங்க அரைஞாண் இவ்வளவு மதிக்கக்கூடியதாயிருக்கவேண்டுமென்றும், பனியன் கோட் இத்தனையென்றும், பிளானல் ஆப் பாரம் இத்தனையென்றும், ஜோபிகள் இத்தனையிருக்கவேண்டுமென்றும், பட்டன்ஸ் இத்தனை இன்னின்னவிடத்தில் வைக்கவேண்டுமென்றும், பி. ஆர் அண்டு ஸன்ஸ் தங்கக்கைக்கெடியாரமின்னமாதிரியென்றும்இன்னும்சொல்லத்தொலையாத பொருள்களெல்லாம் ஜாபிதாஎழுதிக்கொடுத்து முன்னடி தயார்செய்து வைக்கவேண்டுமென்றும், மானம்

சிறிதுமின்றிக் கேட்கின்றார்கள். சம்பந்திகளின் வார்சுதாரர்களில் இன்னின்ன மரியாதைகள் (சோமன் ஜோடிகள், அல்லது சின்னமேளம் பெரிய மேளங்கள், பாட்டுக்கச்சேரி ஆட்டக்கச்சேரிகள்) இஷ்டம்போல் நடக்க வேண்டுமென்றும் உறுதிமொழி வாங்கிவிடுகின்றனர். இன்னும் சில நாளில், மாப்பிள்ளையின் தாசிச்செலவுக்கு வம்புவழக்கு நேர்ந்தால் கோர்ட்டுச் செலவு வக்கில்பீஸுக்கும்கூட மூலதனம் பொதுக்கட்டச் சொல்லியும் கேட்பார்கள் போலிருக்கிறது. பெண்ணைப்பெற்றவனும் ஜென்மாந்தர கோர்ட்டில் தன்பேரில் தீர்ப்பாயுள்ள (ஷை இனங்களுக்காகவேண்டிய) டிக்ரி தொகைக்கு வீடுவாசல் நிலம் முதலியதுகளையாவது விற்று முதலாக்கிச் சரிசொல்லச் சம்மதித்து விடுகிறான். இவன் கதி யாதாகுமென்பது யோசித்துக் கொள்ளவேண்டியதே. அம்மா இவ்வநாகரீகம் இன்னம் கொஞ்சகாலம் இப்படியே நடைபெற்று வருமாகில் பிறகு ஆணும் பெண்ணும் காந்தர்வ விவாகத்தையே அநுசரிக்க நேரிடுமென்று கருத வேண்டிய தன்றி தாய்தந்தையர்கள் சிரமமெடுத்துக்கொள்ளுதல் முடியாததும் விரும்பாதது மாகுமென்பதில் தடையில்லை.

சாந்.—அம்மா தாங்கள் இதுகாறும் தொகுத்துச்சொன்ன ஒவ்வொருஅம்சமும் விவகரிக்கில் ஒவ்வொருபாரதமாகும். அனைத்தும் வாஸ்தவமே இப்படியிருக்கையிலும் சிற்சிலர் தங்கள் பெண்ணின் மேற் பணம் வாங்க பேரம்பேசுகிறார்களே இதென்ன மதி, ?

கிரு.—ஆம் நீங்கள் கூறிய துண்மையே, முற்காலத்தில் பெண்கள்மேல் ரொக்கம் வாங்கும் வழக்கம் சாதாரணமாய் இருந்தது. அதில் இத்தனை விராகன் தான் வாங்கலாமென சம்பிரதாயச் சட்டமும், அதிலும் குலத்திற்குத் தக்கபடி ஏற்றத்தாழ்வுமான மாமூல் நிபந்தனையும் ஏற்பட்டிருந்ததாகத் தெரிகிறது. பிறகு மத்திய காலத்தில், முன்சொன்ன நிபந்தனைமாறி பெண்பிள்ளைகளின் யோக்கிய தாம்சங்களுக்குத் தக்கபடி பலவாறு பெருந்தொகைகளும் சிறுதொகைகளும் வாங்கிப் பெண்களை விற்கும் அநுஷ்டானம் கையாளப்பட்டு வந்தது; இதில் சிலர், பெண்ணைத் தாயார் பிரஸவித்தபொழுது, மருத்துவச்சிக்குக் கொடுத்த கூலியும், மருந்துச்செலவும் வண்ணான் சம்பளமும் கூடக்கணக்குப்போட்டு மணமகனிடத்தில் வாங்கி பின் நிச்சயதார்த்தம் செய்துகொடுத்ததுமுண்டு. இதுவோர் இடைக்கொள்ளை. பெண்ணின்மீது 1,000 வரையிலும் வாங்குவது இயல்பாகவும் நினைக்கப்பட்டுவந்தது. ஆனால் இவ்வழக்கம் கடவுளுக்கே பொறுக்காமல் பிள்ளைக்குப்பணம் கொடுக்கும் வழக்கம் சில வருஷங்களாக ஏற்பட்டுவிட்டது.

ஏற்பட்டும்பட்டினமென்பதைப் பரமபதநாடெனவெண்ணிக்கொண்டிருக்கும்சில பட்டிக்காடுகளிலுள்ள பாமரர்கள் "ஏண்டி கிழவி மஞ்சட்குளிக்கிறுயென்ருல் பழைய நினைவடா பேராண்டி" எனும் பழமொழிக்கிணங்க தங்கள்மாமூல் தொகையை யடைய விரும்புகிருர்கள். விரும்பி யென்னசெய்கிறது. கொடுப்பார் மட்டிலில்லே, கொடுப்பாருண்டானலோ 60 சென்ற கிழமகனானாலும் ஆணும் பெண்ணுமல்லாத அலியானாலும், ஆட்சேபமன்னியில் 5 வயதுள்ள பெண்ணேயும், கொடுக்கத்தடையில்லே. அப்படி பாத்தியப்பட்டாலும் பணம்கிடைப்பது மட்டில் சந்தேகம்தான். நூற்றுக்கொருவர்க்கு, மேலேசாட்டிய தகுதியுள்ள மணமகனுல் சிறிது தொகையும் பலித்துவிடுகிறது. தாங்கள் ஆண்மைபற்றவராயிருந்தும் தம்மையொத்தபிறர் அந்தமர்மத்தையறியப்படாதென்னும் எண்ணத்தால், இப்படிப்பட்ட மாம்ஸ விக்கிரயப் பிரபுக்களிடம் கையில் கொஞ்ச நஞ்சமிருப்பதைக் கொட்டிக்கொடுத்து, சின்னளில் தெருச்சிரிக்குமென்பதை சற்றும் யோசியாது பெண்ணே மணம்புரிந்து மகிழும் பெரும்பாவிகளு மிரண்டொருவரிருக்கின்றனர்.

சாந்.—அம்மா இப்பொழுது தாங்கள் கூறிய விஷயம் மிக்க கொடுமையானது, இதற்குமேலே விவசரித்த இக்கொடுமைகள் ஈடாகாதென்றே சொல்லலாம்.

கிரு.—அம்மா உள்ளபடியோசித்தால் கொடுமையல்ல, அவ்வளவும் மூடத்தனமே. தாய் தந்தையர்கள் தக்க உலகஞானமுள்ளவர்களாயிருந்தால் இப்படியெல்லாம் மோசம் போவார்களா? அல்லது வேறுவிதங்களால்தான் தங்கள் பெண் நிர்ப்பந்தத்திற்குள்ளாகும்படியான செய்கைகளே செய்வார்களா? நமது இந்து குடும்பங்கள் சிறிதேனும் மதிக்கத்தகுந்த ஸ்திதிக்கு வந்திருப்பதாகச் சொல்லக்கூடவில்லே. பாஷாபிவிர்த்தி முன்னேயைவிட எங்மடங்கு ஒவ்வோரிடத்திலும் பரவிவருவதாகச் சொல்லக்கூடிய நிலேமையையடைந்தும் குடும்பங்களின் உள்ளுழல்கள் சீர்திருந்தாமைக்குக் காரணம் அக்குடும்பங்களின் முக்கிய அங்கங்களாகிய பெண்பாலகர்க்கு ஆழ்ந்தபடிப்பில்லாமலிருப்பதே யல்லாமல் வேறில்லே. சிலர் வண்ணனுக்கு இத்தனே உருப்படி போடப்பட்டதென்பதும், வீட்டுச்சாமான்கள் இன்னின்னவைகள் இவ்வளவு இவ்வளவிற்கு வாங்கப்பட்டனவென்பதையும் மட்டில் எழுதிவைக்க எவ்வளவு படிப்போ அவ்வளவிருந்தால் போதுமென எண்ணுகிருர்கள், மேற்சொன்ன இருவ

கைக்கும் கல்வியே அனுவசியம், எழுத்து வாசனையே தெரியாத சாமானிய ஸ்திரீகளும் ஒரு இம்மி விடாமல், வாய்க்கணக்காகவே (வேண்டுமானால்) பெருந்தொகை வரவு செலவுகளும் சொல்லக்கூடியவர்களாயிருக்கின்றனர்கள். உதாரணமாக நலங்கு, லாலி, ஊஞ்சல், மங்களம் எனப்பல பெயருள்ள கலியாணப் பாட்டுகளை எந்த ஸ்திரீயாவது புஸ்தகத்தில் படித்துப் பாடம் செய்ததுண்டா? அல்லது ஒரு பெண்பாலிடம் மற்றொரு பெண்பால் வாய்ப்பாட்டாக ஒருமாதம் இரண்டுமாதம் இடைவிடாது முன்சொல்ல அதன்வழிப்பின் சொல்லி நல்லதங்காய்கதைபோல் ஞாபகசக்தியைக்கொண்டு குருட்டுப்பாடம் செய்து வரப்பற்றுவதா? என்பதைச் சற்று யோசித்துப்பார்த்தால் மனோவர்த்தன செலவுகள் எழுதவேண்டியதற்காகக் கல்வி அவசியம் அன்றென்பது தெள்ளிதில் விளங்கும், கல்வியறிவானது கற்பு, ஈகை, சாந்தம் முதலிய நற்குணங்களாகிய பெரும் பயன்களையுமடைதற்கேற்ற சாதகமாய் நிற்பதாதலின், கல்வியறிவில்லாரும் சாதாரணமாய் நிர்வகிக்கக்கூடிய சில்லரை விஷயங்களை அதனாலடையும் பெரும் பயனாகவெண்ணி யத்துடன் திருப்தியடைவது எவ்வளவு துர்ப்பாக்கியம். அப்படிப்பட்ட சில்லரை விஷயங்கட்கும் கல்வித்துணை சாதகமேயன்றி பாதகமாகமாட்டாது. ஆயினும், அதையே முழுப்பயனென வெண்ணி மேற்படிப்பை வழுகவிடுவது கூடாதென்பதே எமதெண்ணமாகும்.

அசலாம்பிகைபம்மாள்.

---

## புரொபஸர் மாக்ஸ்முல்லர்.

இவர் ஜர்மானி தேசத்தில் 1823–ஞ் டிசம்பர்-மீ 6உ தேசௌ என்கிற கிராமத்தில் ஜனித்தார். ஜர்மன் கவியாகிய இவர் தந்தையார் வில்ஹெல்லம் முல்லர் புத்திர பாக்கியத்தைப் பெற்றதற்காக மிகமகிழ்ந்து வெகு அன்புடன் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக மூன்றும்பிறைச் சந்திரனைப்போல் உதித்த மகனைவளர்த்துவந்தார். கல்விகற்கத் தக்கவயது வந்தபொழுது தேசௌவிலுள்ள ஒரு பாடசாலையில் இவரைப்படிக்கவும் செய்வித்தார். பின்பு லீப்சிக்கும் கொஞ்சகாலம் படித்தார். பின்பு லீப்சிக், பர்லின்கலாசாலைகளில் அரபி, பர்ஷியன், சம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளைக் கற்றுவந்தார். "உலகத்தில் கற்றோர்களில் வழங்கி வரும் சாஸ்திரங்களில், பல ஜாதியார்களின் பாஷைகளை ஆதியந்தமாக இலக்கண, இலக்கிய விவரங்களுடன் கற்று ஒற்றுப்பார்த்து மனிதகோடி

களின் நாகரீக வளர்ச்சியின் சரித்திரத்தை விளக்குவது ஒரு சாஸ்திரம்.'' அது தான் ஆங்கிலத்தில் கம்பேரடிவ் பைலாலிஜி என்று சொல்லப்படுகிறது (Comparative Philology.) இச்சாஸ்திரசம்பந்தமானவும், தத்துவ சாஸ்திரசம்பந்தமானவுமான உபந்நியாசங்களையும் கேட்டுவந்தார். இவருக்கு வறுமைமேலிட்டிருந்தமையால் அதிக கஷ்டப்படவேண்டியிருந்தது. இப்படியிருந்தும் வாழ்நாளை வீணுக்கழிக்காமல் கல்வியிலேயே மனதைச் செலுத்திவந்தமையால் இவர் 18-வயதில் மேற்கூறிய பாஷைகளை வெகு நன்முகப் பயின்று அநேக கிரந்தங்களையும் வாசித்திருந்தார். மேலும் இவர் இதர 15 பாஷைகளையும் கற்றுவந்தார். 1843-ம் ௵ ஜர்மானிய கலாசாலையாரால் பட்டம்பெற்று அடுத்த வருஷம் நீதிக்கதைகளடங்கிய ஹிதோபதேசம் என்ற சம்ஸ்கிருத கிரந்தத்தை வெளியிட்டார். அவர் தான் முதலில் எவ்விதமாக கஷ்டப்பட்டு ஜீவனம் செய்தாரென்று அவரே சொல்வது யாதெனில், "தான் கீழ்தேசங்களது நூல்களின் கையெழுத்துப் பிரதிகளைப் பெயர்த்தெழுதிப் பிறருக்குவிற்றுச் சீவித்துவந்ததுஎன்பதே.'' இவர் சிறுவராகவிருந்தபொழுது இந்துக்களின் வேதமாகிய இருக்குவேதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு 20 வருஷம் இதிலேயே தன் முழு மனத்தைச் செலுத்தி இரவும் பகலும் ஓயாது உழைத்து இவ்விருக்குவேதத்தை 6 புஸ்தகங்களாக அச்சிட்டு வெளியிட்டதே இவர் மனோரதம் நிறைவேறிற்றென்பது சொல்லாமலே விளங்கும். இவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்துவந்தும் அக்காலத்தில் இந்தியாவில் அரசாட்சி செய்துவந்த ஈஸ்ட் இந்தியா கம்பனியார் இவருக்கு ஒரு குமாஸ்தாவுக்குக் கொடுக்கிற சம்பளந்தான் கொடுத்தார்களாம். பின்பு இவர் மனவருத்தத்துடன் தனக்கு இவ்வித குறைவான சம்பளம் வேண்டாமென்று வந்தனத்துடன் மறுத்து தமது புஸ்தகத்தை முடித்தார். முடிவுபெற்றவுடன் இந்தியா கவர்ன்மெண்டார் தயாள குணத்துடன் இவருக்கு தக்க பரிசு அளிக்கவே ஜனங்கள் உலகமெங்கும் இவரைமதிக்க ஆரம்பித்தார்கள். இவருக்கு அதுமுதல் கீர்த்தியும் செல்வமும் விருத்தியுண்டாவதற்கு காரணமென்றே சொல்லலாம்.

1846-ம்௵ மாக்ஸ்முல்லர் ஆக்ஸ்போர்டில்சிறிதுகாலம் தங்கியிருக்க எண்ணி அங்கு சென்முர். சிலதினம் தங்கியிருக்க எண்ணினவர் சுமார் 50 வருடம் தங்கியிருக்க நேர்ந்தது. அங்கு இவர் 15 இதரபாஷைகளை கற்றுக்கொண்டார். இவைகளின் சாஸ்திரப்பழக்கத்தால் பிரசங்கம் செய்தும், பத்திரிகைகளுக்கு நிருபம் அனுப்பியும், இவ்விஷயத்தில் உலகத்தாருக்கு அறிவைப் புகட்டியிருக்கின்முர். இவ்வளவு கஷ்டப்பட்டு உழைப்

பானேன் என்று நமது மாதர்கள் கேட்கக்கூடும். இது சம்பந்தமாய் முல்லரவர்கள் ஒரு சமயத்தில் பின் வருமாறு சொல்லியிருக்கிறார்:— "நான் வேலைசெய்துகொண்டிருக்கும்பொழுது எனக்கிருக்கும்படியான சந்தோஷம் ஒருபொழுதும் எனக்குக்கிடையாது." 1868-ம் வருஷம் (Comparative Philology) கம்பேரடிவ் பைலாலஜி சாஸ்திர சம்பந்தமாய் ஒரு போதகஸ்தானம் (Oxford) ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் ஏற்படுத்த ஒரு சட்டம் செய்யப்பட்டது. இதில் இந்தப் புது ஏற்பாடு மாக்ஸ்முல்லருக்கே உரியதென கண்டிருந்தபோதிலும், இவர் இதை ஒத்துக்கொள்ளும் பக்ஷத்தில் வேறொருவரை நியமிக்க யோசிக்கவேண்டியதில்லையென தீர்மானித்தார்கள். இதற்கு இவர் சம்மதித்து இந்த மேன்மையான பதவியை வகித்து பெரும்சம்பளம் பெற்றுவந்தார். இப்பதவியை யடைய இவரைத்தவிர வேறொருவருமில்லை யெனவும், இவரே நிபுணரெனவும் ஜனங்களும் பார்லிமெண்டாரும் புகழ்ந்தார்கள். இவ்விதம் இவர் அபாரமான வேலைகளைச் செய்துகொண்டு வரும்நாளில் மகாராணியாரவர் களிவரைத் தம்முடைய அந்தரங்க ஆலோசனைச் சபையில் (Privy Council) சேர்த்தார். "ரைட் ஆனரெபில்" என்ற பட்டத்தைக்கொடுத்தார். எல்லா இராஜாங்கத்தாரும் இவருக்குப் பட்டங்களளித்தார்கள். இவர் "கீழ்த்தேசங்களின் புண்ணியக் கிரந்தங்கள்" (The Sacred Books of the East) என்று இந்தியா, சீன, அரேபியா, பர்ஷியா, முதலிய தேசங்களது முக்கியமான புண்ணிய கிரந்தங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பதிப்பித்தார். "இந்தியா நமக்கென்ன போதிக்கலாம்" என்ற அபூர்வமான கிரந்தத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார். சமீபத்தில் இவர் இறக்கும் சமயத்தில் "இந்துக்களின் ஆறு சாஸ்திரங்கள்" என்று ஒரு புஸ்தகத்தையும், "இந்தியாவில் எனது நண்பர்கள்" என்ற ஒரு புஸ்தகத்தையும் பிரசுரித்திருக்கிறார். இவர் இன்னும் மதசம்பந்தமாயும் தமது அபிப்பிராயத்தைப் பலபத்திரிகைகள் மூலமாய் எழுதிக்கொண்டுவந்தார். இவருடைய கடைசி காலத்தில் "சீனவின் மதங்கள்" என்ற விஷயத்தை ஒரு மாதாந்தர ஆங்கிலேய பத்திரிகையில் 1900வருஷம் நவம்பர்-மீ"த்தில் (Nineteenth century") பிரசுரித்திருக்கிறார். இவருக்கெவ்வளவு அபிமானம் நம்முடைய கிரந்தங்களில் இருந்ததோ அவ்வளவு நம்மவரிடத்திலுமிருந்தது. இந்தியாவுக்கு வராமலே இவ்வளவு அபிமானமுள்ள இவர் இந்தியாவுக்கு வந்துமிருந்தால் இவருடைய அபிமானம் அதிகமாகவேயிருந்திருக்கும் என்பதற்கு ஐயமில்லை.

கடைசியாக இவ்வளவு அபிமானம் வைத்திருந்த புரொபஸர் மாக்ஸ்முல்லர் தமது 77-வது வயதில் மரணமடைந்தது நமக்கும், மற்ற இந்திய

களுக்கும், அவருடைய நேயர்களுக்கும், ஆக்ஸ்போர்டுக்கும் தீராத்துக்கத்தை விளைவித்தது.

## பூமிசாஸ்திரம்.

### முதலாவது அத்தியாயம்.

நாம் வசிக்கும் பூமியானது ஆகாயத்தில் நம்முடைய கண்களுக்குத் தெரிகிற சூரியன், சந்திரன் முதலான கிரகங்களைப்போல ஒரு உருண்டை வடிவமான கிரகம். ஆனபோதிலும் அதினுடைய உருண்டை வடிவமானது அதன்மேல் வசிக்கும் நமக்குத் தோன்றாமல் விசாலமாயும் தட்டையாயும் இருப்பதுபோல் காணப்படுகிறது. நமக்கு ஒரே காலத்தில் கண்ணுக்குப் புலப்படும் பிரதேசமானது பூமியின் ஒரு சிறு பாகமாத்திரமாகையால்தான் தட்டையாய் காணப்படுகிறதே யொழிய வேறல்ல. பூமியானது உருண்டைவடிவமாயிருக்கும் விஷயம் சந்தேகமன்றியில ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரமாய் அநேகதிருஷ்டாந்தங்களைச் சொல்லக்கூடும். அவற்றுள் முக்கியமானவைகளாவன ;—

(1) சமுத்திரத்தில் வெகு தூரத்திலிருந்து கரையை நோக்கி வரும் ஒரு புகைக்கப்பலானது தூரத்திலிருக்கும்போது கரையில் நிற்கும் மனிதனுக்கு முதல் முதலில் சற்றேனுந் தெரிகிறதில்லை. கிட்டவரவர முதலில் புகையும் பிற்பாடு பாய்மரமும் புகைக்குழாயும் பிறகு அப்புகைக்கப்பலின் முன்பாகமும் கடைசியில் அதின் பின்பாகமும் இப்படி ஒன்றின் பின் ஒன்றாய் அதின் பாகங்கள் கண்ணுக்குப் புலன்பட்டுக் கடைசியில் புகைக்கப்பல் முழுமையும் காணப்படும். அந்தப் புகைக்கப்பலானது எத்திசையிலிருந்து வந்தாலும் மேற் சொன்னபடியே கண்ணுக்குத் தோன்றும்.

இப்படித் தோன்றுவதற்கு பூமி உருண்டை வடிவமாயிருப்பதே காரணம். பூமியானது உருண்டையாயில்லாமல் தட்டையாயிருந்தால் மேற்சொன்ன புகைக்கப்பலின் பாகங்கள் ஒன்றின் பின் ஒன்றாய் கண்ணுக்கு வெளிப்படாமல், முதலில் அது ஒரு சிறிய புள்ளிபோலத் தோன்றி கரையின் சமீபத்தில் வரவர கொஞ்சங்கொஞ்சமாய்ப் பெரிதாகத்தோன்றி அதனு



டைய உருவம் முழுவதும் ஒரே காலத்தில் வெளிப்படையாகத்தெரியும்.

(2) ஒரு மனிதன் பூ சஞ்சாரம் செய்து வரவேண்டுமென்ற உத்தேசத்துடன் தன் பட்டணத்தைவிட்டு ஒரேதிசையை நோக்கி பயணம் புறப்பட்டு சமுத்திரம் வந்தால் சமுத்திரத்தையும், பூமி வந்தால் பூமியையும் கடந்து பின்னுேக்காமல் நேராகப் பிரயாணஞ் செய்துகொண்டுபோனுல் கடைசியாய் எலுமிச்சம்பழத்தைச் சுற்றும் எறும்பைப்போல் தான் புறப்பட்ட இடத்திற்கே மறுபடியும்வந்து சேருவான். சென்னப்பட்டணத்திலிருந்து அநேக வெள்ளைக்காரர்கள் நேர் கிழக்கை நோக்கிப் பிரயாணஞ்செய்து ஜப்பான், அமெரிக்கா முதலான தேசங்களைத்தாண்டி மேற்றிசையிலிருக்கும் தங்களுடைய தேசத்திற்குப்போய் அங்கிருந்து கீழ்த்திசையை நோக்கிப் புறப்பட்டு மறுபடியுஞ் சென்னப்பட்டணம் வந்து சேருகிறுர்கள்.

(3) விசாலமான ஒரு மைதானத்தில் இருந்துகொண்டு நாம் நம்மைச்சுற்றிலும் பார்த்தால் நம்முடைய பார்வைக்குக் கொஞ்சதூரத்தில் எல்லாதிசைகளிலும் ஆகாயம் பூமியைத் தொட்டுக்கொண்டிருந்தாற்போலும், நம்மைச்சுற்றிலும் கண்ணுக்குப் புலப்படும் பிரதேசமெல்லாம் சக்ராகாரமாயிருப்பதுபோலும் காணப்படும். பூமியானது தட்டையாயிருந்தால் அவ்விதமாக காணப்படமாட்டாது. தவிரவும் சந்திர கிரகணகாலத்தில் பூமியானது சூரியமண்டலத்திற்குஞ் சந்திரமண்டலத்திற்கும் நடுவே வருகிறதென்றும், அப்போது பூமியினுடைய நிழலானது சந்திரன்மேல் விழுகிறதென்றும் பின்னுல் தெரியவரும். இந்த கிரகண நிழலானது வட்டமாயிருக்கிறது. மேற்போன்ற காரணங்களால் பூமியானது உருண்டை வடிவாயிருக்கிறதென்று தீர்மானித்திருக்கிறுர்கள்.

பூமியானது உருண்டைவடிவமானதென்று நாம் சொன்ன போதிலும் அது பந்தைப்போல் பூரணமான உருண்டைவடிவுள்ளதல்ல. அது கிச்சிலிப்பழத்தைப்போல மேலும் கீழுங் கொஞ்சந்தட்டையாயும் நடுவில் கொஞ்சம் பருத்தாற்போலும் இருக்கிறது.

பூமியில் தட்டையான இந்த வடமுனையை உத்தரமேரு (North Pole) என்றும், தென் முனையை தக்ஷணமேரு (South Pole) என்றும் சொல்லுகிறுர்கள்.

வடமுனையிலிருந்து தென்முனைவரையில் பூமியின் உள்மார்க்கமாய் அளந்துபார்த்தால் 7899 மைல் இருக்கும். அதேமாதிரியாய் குறுக்களவுபார்தால் 7925 மைல் இருக்கும். ஆகையினுல் உத்தரமேருவிலிருந்து தக்ஷணமேருவரையிலுள்ள அளவைக்காட்டிலும் குறுக்களவு இருபத்தாறு மைல் அதிகமாயிருக்கிறது. இப்படி மேலேயும் அடியிலும் தட்டையாயிருந்து

நடுவில்கொஞ்சம் பருத்திருப்பதின் காரணம் இன்னதென்று அடியில் வரும் நிரூபணத்தால் தெரியவரும்.

ஒரு சிறு பலகையின் நடுவில் ஒரு இரும்புக்கம்பியை பலமாய் நாட்டி அரை அங்குல அகலமுள்ள இலேசான பித்தளைப்பட்டைகளைக்கொண்டு சக்கராகாரமான இரண்டு சமமான வளையங்களைச் செய்து அந்த வளையங்களில் மேலுங் கீழும் மேற்சொன்ன இரும்புக்கம்பி இலேசாய் நுழையும்படியாய் துவாரங்கள் செய்து அந்த துவாரங்களின் வழியாய் மேற்சொன்னஇரும்புக் கம்பியைச் செலுத்தி மூன்றாவது சித்திரபடத்தில்காணும் உருவைப்போல் செய்து அந்தக் கம்பியை நாட்டியிருக்கும் பலகையை நமக்குத்தெரிந்த ஏதேனும் ஒரு உபாயத்தால் வேகமாய்ச்சுழற்றினால் பின்வருமாறு காண்போம். இரண்டு வளையங்களாலான உருண்டை இரும்புக்கம்பியாகிய இருசைச்சுற்றி சுழலும்போது அது ஒரு உருண்டையான பந்தைப் போல் தோன்றும். சுழலும் வேகம் அதிகரிக்க அதிகரிக்க அந்தப்பந்து கொஞ்சங் தட்டையாய் அல்லது சப்பையாய் இரண்டாவது படத்தின் இருண்டபாகத்தைப்போல் காணும். இதே பிரகாரமாய் பூகோளமும் தானே தன்னைச்சுற்றி சுழன்றுகொண்டிருக்கிறது. ஆதிமுதற்கொண்டு இந்தப்படி சுழன்றுகொண்டிருக்கிறபடியால் பூமியாகிய கோளம் மேற்பாகங்களில் தட்டையாயிருக்கிறது. இப்படி பூமியானது தன்னைச்சுற்றி தானே சுழலுவதற்கு தினசலனம் (நாள்தோறும் நகருதல்) என்று பெயர். பூமியானது ஒரு தினத்தில் அதாவது இருபத்துநாலுமணி நேரத்தில் மேற்சொன்ன பிரதக்ஷணம் ஒன்று செய்கிறது. சூரியன் ஒரு இடத்தில் ஸ்திரமாயிருந்து அவன் கிரணங்கள் எப்பொழுதும் பூமியின்மேல் விழுந்துகொண்டிருக்கின்றன. ஆனால் பூகோளமானது உருண்டைவடிவமாயிருக்கிறபடியால் அதின் ஒருபாதி மாத்திரந்தான் ஒரு காலத்தில் சூரியனுக்கு எதிராகவிருந்து அவனால் பிரகாசிக்கப்பட்டு மற்றொருபாதி இருளால் மூடப்பட்டிருக்கிறது.



ஆனால் மேற்சொல்லியதினசலனத்தால் முதலில் இருளால் மூடப்பட்டபாகமும்கூட சூரியனுக்கு எதிராகவந்து பிரகாசிக்கப்படும். இதனால்தான் நமக்கு இரவு பகல் என்ற பேதங்கள் உண்டாயின. நமக்குப் பகலாயிருக்கும்போது மற்றொருகண்டத்தில் (அமெரிக்காவில்) இரவும் நமக்கு இரவாயிருக்கும்போது அவர்களுக்கு பகலும் உண்டாகும். பூமியானது இப்படி வேகமாய்த்தன்னைச்சுற்றி தானேசுழலுகிறது என்பது நமக்கு

ஆச்சரிய கரமாய்த்தோன்றலாம். தவிர பூமியின் ‘சனைம்’ அல்லது சுழல்தல் அதன் மேல் வசிக்கும் நமக்கு என் தெரிகிறதில்லையென்றும் சிலர் சந்தேகப்படலாம். ஆகையால் இதை நாம் சாமான்யமான இரண்டொரு திருஷ்டாந்தங்களால் ஸ்திரப்படுத்துவோம். ஒரு மனிதன் வேசமாய்ப் போகும் ஒரு தோணியில் உட்கார்ந்துகொண்டு கரையிலிருக்கும் மரங்களையும் வீடுகளையும் பார்த்துக்கொண்டே யிருந்தால், தோணி முன் செல்லச்செல்ல. மரங்களும் வீடுகளும் தனக்கு எதிரே ஓடி வருவதுபோல் தோன்றுமே யொழிய தோணியானது நகருகிறதாகவே காணப்படுகிறதில்லை. இதேமாதிரியாய் இரண்டு புகைவண்டிகள் ஒரே இடத்தில் நின்றிருந்து அவற்றுள் ஒன்று புறப்பட்டால் அந்த புறப்பட்ட வண்டியிலுட்கார்ந்திருந்தவர்களுக்கு மற்றொரு வண்டிபோவதுபோல் தோன்றுகிறதே ஒழிய தாங்கள் உட்கார்ந்துகொண்டிருக்கும் வண்டி நகருகிறதாய் காண்கிறதே இல்லை. இதுபோலவே நம்முடைய பூமியானது எப்பொழுதும் சுழன்றுகொண்டிருந்த போதிலும் அதன்மேலிருக்கும் நமக்கு பூமி ஸ்திரமாயிருப்பதுபோலும் சூரியனே கிழ்த்திசையினின்று மேற்குதிசையை நோக்கி பிரயாணஞ் செய்வதுபோலும் காணப்படுகிறது. ஆனால் நிசம் என்னவென்றால் சூரியன் ஸ்திரமாயிருந்து பூமியானது சூரியனைச்சுற்றி மேற்றிசையிலிருந்து கிழக்குத்திசையை நோக்கி சுற்றிக்கொண்டிருப்பதேயாம். இப்படி பூமியானது கிறு கிறு என்று தன்னைச்சுற்றி சுழன்றுகொண்டிருந்தால் நாம் ஸ்திரமாய்க் காலை யூன்றி ஆயாசமின்றி அங்குமிங்கும் திரிந்துகொண்டிருந்தபோதிலும் சுழன்றுகொண்டிருக்கும் தாம்பாளத்தில் வைத்தபட்டாணிக்கடலைகளைப் போல் என் கீழேவிழுந்துவிடுகிறதில்லை என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். இதையும் சுலபமாய் தெளிவாக்கலாம். நாம் நம்முடைய கண்ணுக்குத் தெரியாத பலமான இழுக்கும் சக்தியினால் பூமியில் கட்டப்பட்டிருக்கிறோம்; ஆகையினால்தான் பூமியானது மேற்சொன்னபடி சுழன்றுகொண்டு சூரியனைச் சுற்றுங்காலத்தில் நாம் கீழே விழுகிறதில்லை. இந்த இழுக்கும் சக்தியானது பூமிக்கும் அதன் மேலுள்ள எல்லாவஸ்துக்களுக்கும் ஒரு பரஸ்பரமான சம்பந்தமாயிருக்கிறது; அதாவது பூமி அதின்மேலுள்ள வஸ்துக்களை இழுக்கும். அவ்வஸ்துக்களும் பூமியை இழுக்கும். ஆனால் இந்த இழுக்கும் சக்தியின் வலிமையானது வஸ்துக்களின் பரிமாணத்தைப் பொருத்ததாயிருக்கிறது. பூகோளத்தின் பரிமாணத்தையும் அதன்மேலிருக்கும் வஸ்துக்களின் பரிமாணத்தையும் ஒப்பிட்டுப்பார்க்கும் காலத்தில் பூகோளமே அதிக பருமனுள்ளதாயிருக்கிறது. பூமியின் இழுக்கும் சக்தி அதிகமாயிருக்கக் கண்டு சாதாரணமாய் இந்த சக்தி பூமிக்குமாத்திரம் உரியது என்று சொல்

வது வழக்கம். இந்த இழுக்கும் சக்திக்கு "ஆகருஷணம்" அல்லது பூமத்திய ஆகருஷண சக்தியென்று பெயர் வழங்குகிறது. நாம் பூமிக்கு ஒட்டிக்கொண்டிருக்கும் வரையில் இந்த சக்தியின் வலிமைதெரியாது. ஆனால் பூமியிலிருந்து கொஞ்சமேனும் மேல் ஏறினால் உடனே நம்மையும் இச்சக்தியானது இழுக்கும். பூமியிலிருந்து மேல்நோக்கி ஒரு கல்லை எறிந்தால் அது நிச்சயமாய் மறுபடியும்பூமியிலேயே விழுந்துவிடும் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இதற்கு மேற்சொன்ன பூமியின் இழுக்கும் சக்தியே காரணம். நாம் வஸ்துக்களின் பளு அல்லது பாரமென்று சொல்வதுங்கூட அச்சக்தியின் வலிமையே. அல்லாமலும் வஸ்துக்களின் பாரத்தை தீர்மானிப்பது என்பது நிசமாய் அந்த வஸ்து பூமியினால் இழுக்கப்படும் சக்தியை தீர்மானிப்பதே தவிர வேறல்ல. இந்த சக்தியின் வலிமையால் நாம் பூமியைவிட்டுப்போக மாளாது.


பூமிக்கு மேற்சொன்ன தினசரி சுழலும் சலனத்தைத் தவிர வேறொரு சலனமுமுண்டு; தன்னைச் சுற்றி சுழன்றுகொண்டிருக்கும் போதே சூரியனைச்சுற்றியும் பிரதக்ஷணஞ்செய்து கொண்டிருக்கிறது. ஒரு பம்பரத்தை கயற்றினால்சுற்றி சுழற்றிவிட்டு விட்டால் அது எப்படி தன்னைச்சுற்றி தானே சுழன்று இருந்தவிடத்திலேயே யிருக்காமல் சக்கராகாரமாய் சுற்றிக்கொண்டிருக்கிறதோ அதேபிரகாரமாய் தன்னைச்சுற்றித் தானே சுழன்றுகொண்டிருக்கும்போதே பூமியானது ஒவ்வொரு நிமிஷத்திலும் இருந்தவிடத்திலேயே இருக்காமல் நகர்ந்துகொண்டு சூரியனைச்சுற்றி பிரதக்ஷணஞ்செய்யும். சூரியனைச்சுற்றி ஒரு பிரதக்ஷிணைசெய்ய பூமிக்குஒருவருஷம் அல்லது 365¼ நாள்செல்லும். பூமியானது சூரியனைச்சுற்றி செல்லும் மார்க்கம் சரியாய் சக்கிரவட்டமாயில்லாமல் அண்டாகிருதியாய் அல்லது கோழிமுட்டை வடிவமாய் இருக்கிறது. பூமியானது சூரியனைச்சுற்றி நகரும்போது பூமியின் உத்திரமேரு நேர்மேலாகவும் தக்ஷிணமேரு நேர் கீழாகவும் இருக்கிறதில்லை; சூரியனை நோக்கிச் சற்றுச்சாய்ந்துகொண்டிருக்கும். ஒரு வருஷத்தில் ஆறுமாதம் உத்தரமேரு சூரியனை நோக்கிச் சாய்ந்தும் மீதி ஆறுமாதங்களில் தக்ஷிண மேரு சூரியனை நோக்கிச் சாய்ந்துமிருக்கும். ஆனால் நாம் மேற்சொல்லிய திருஷ்டாந்தங்களால் பூமியின் மேலிருக்கும் நமக்கு பூமியானது அப்படிச் சாய்ந்து நகருகிறது என்று தோன்றாமல் சூரியனே தன்னுடையபாதையை மாற்றிக்கொண்டு போகிறதுபோல் தோன்றும். வருஷத்தில் இரண்டு நாள் மாத்திரம் (அதாவது மார்ச்சி மாதம் 21-ந்தேதியிலும் செப்டம்பர் மாதம் 21-ந்தேதியிலும்) சூரியன் நேர்கிழக்கில் உதித்து ஆகாயத்தில் நேர் மத்தியாய்ச் சென்று நேர் மேற்கில் அஸ்தமிக்கிறார் போலக்காணும்.

காரரான சாமுவைய்யர் சம்பாத்தியத்திற்கு சொல்லவும் வேண்டுமா! சம்பாத்யம் எப்படியோ அப்படியே செலவும். வந்த மிராசுதார்கள் அத்தனே பெயர்களும், சாமுவைய்யர் வீட்டில் கை நெய்யும் சாதமுமாய் சாப்பிட்டுப்போவார்கள். அன்றியும் "சாப்பிட்டால் அந்த மகாலட்சுமீ கையால் சாப்பிடவேண்டும், என்ன தாராளம்! என்ன நாசூகுசமையல்! நம் வீட்டில் இவ்வளவு புளித்தண்ணியைக் கறைத்து அதன் தலையில் முளகாய்ப் பொடியைத்தூவி வெந்ததும் வேகாத்துமாய் பொகை நாற்றம் நாற ஒரு குழம்பு என்று குத்துவாள். சாமுவைய்யர் சம்சாரம் என்னகருக்கு பார்த்தயா; குழம்பு உள்ளே எடுக்கும்போதே கம் என்று என்ன வாசனே! அடே ஊருகாய் எத்தனே விதம்; உப்பிலிட்டது எத்தனே வகை; உத்தியோகஸ்தன் உத்தியோகஸ்தன் தான். 2 கோசுமலி, 2 வருவல், ஒரு பொரித்த கொழம்பு, ஒரு சாம்பார், ஒரு துக்டா; இவ்வளவும் 10-நாழிகைக்குள் எப்படி இவர் வீட்டில்மட்டும் ஆகிறது! நமது ஊரில் முட்டையை அடுப்பில்வைத்து பூ பூ என்று ஊதிக்கொண்டு ஒரு சோறு பொங்கி ஒரு புளித்தண்காய அர்த்தாஸ்தமனமாகிறதே! பட்டிக்காட்டு பிணங்கள் பட்டிக்காட்டு பிணங்கள்தான். சைய்! என்னயிருந்தாலும் உத்தியோகஸ்தன் உத்தியோகஸ்தன்தான்! உத்தியோகஸ்தன் மனேவி உத்தியோகஸ்தன் மனேவிதான். நாட்டுப்புற பிணங்களே கட்டியழுவதை விட பரதேசம் போகலாம். அடே நேற்று கார்த்திகையாயிற்றே யஜமான் வீட்டில் வடைதட்டி யிருந்தார்களே. அதில் எத்தனே விதம் சரக்கு யிருந்தது! இஞ்சி, கருவேப்பலே, கொத்துமல்லி, பச்சைமுளகாய், சீரகம் முளகு, இத்தனேயுமிருந்ததே; இத்தனேயும் யிருந்ததாக யாருக்காவது தெரியுமா? வாயில் போட்டால் அந்தவடை உடனே கறைந்து போய்விட்டதே! நமது வீட்டிலோ செறுப்புத்தோலே கடிப்பது போல கடித்திழுக்கவேண்டும்" என்பான். இப்படி சொல்லிக்கொண்டிருக்கும்போது யஜமானி ஏதாவது எச்சிலெறிய வெளியே வரக்கண்டுவிட்டால் பயபக்தியுடன் கொஞ்சம் ஒதுங்கி நின்று "அம்மா தங்கள் கையால் சாப்பிட்டால் அரோசிகம் தீரும். இத்தனேவிதம் 10 நாழிகைக்குள் எப்படி செய்தீர்கள்" என்று சிலாகிக்கையிலேயே அதற்கு அந்த அம்மணி "காலமே நித்யம் அருணோதயத்துக்கு எழுந்திருக்கிறவள் இன்றைக்கு நான் உதித்து ஒரு நாழிகைக்குத்தான் எழுந்திருந்தேன். அந்த வாசல் கூட்டினம் வரப்பட்டவள் இன்றைக்கென்று நின்று விட்டாள். பாத்திரம் எல்லாவற்றையும் நானே துலக்கவேண்டியிருந்தது; அப்புறம் சறசற என்று வீடுமுடிய மெழுகி, வெள்ளிக்கிழமையாயிற்றே, கோலமிட்டு, நீர் வேண்டுமாகில் கேளும், குளித்துவிட்டு மடிப்புடவை கட்டிக்கொண்டு சாம

த்துக்குத்தான் உலைநீர்வைத்தேன், இந்த லெக்ஷணத்தில் நெட்டிலிங்கத்துக்கு இரண்டு நாளாய் பித்தஜுவரம், அவனுக்கு முதலில் கஷாயம்போட்டு மருந்துகொடுத்துவிட்டு ஐயோ கச்சேரிக்கு நாழியாய்விட்டதே என்ன சொல்லுவார்களோ ஏதுசொல்லுவார்களோ என்று சமையல் செய்தேன். இன்றைக்கு என் ஸ்மரணை எனக்கே இல்லை எதுக்கு உப்புப்போட்டேனோ எதுக்கு உறப்புப்போட்டேனோ எனக்கே தெரியாது. என்னமோ பயித்தியக்காரிபோல பொங்கினேன். என் சமையலை நீர்தான் மெச்சிக்கொள்ள வேணும், வெளியிலே சொல்லாதேயும் வெட்கக்கேடு யாராவது கேட்டால் சிரிக்கப்போகிறார்கள்'' என்று சொல்லி கொஞ்சம் சிரிப்பாள். அதற்கு அந்த பிராமணன், சரி சரி அவசரச்சமையலை நளபாகமாயிருந்தது; நிதானச்சமையல் எப்படியிருக்குமோ என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே உள்ளேபோய்விடுவாள்.

இம்மாதிரி சாமுவைய்யர் வீட்டில் நித்தியம் 10 பெயர்கள் யாராயிருந்தாலும் வந்தவனுக்கு அன்னமில்லை என்ற பேச்சில்லாமல் சாப்பிட்டுவருவார்கள். அதற்கென்ன ஆக்ஷேபணை, ஒவ்வொரு மிராசுதாரும் கொண்டு வந்து கொட்டும்போது அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏன் இவர் கொட்டக்கூடாது. சிலர் வாங்குவதில் மாத்திரம் சமர்த்தர்களாகவிருந்து கொண்டு உலோபிகளாய் தன்னுடன் மற்றொருவன் உட்கார்ந்து சாப்பிடப் பொறுக்கார்கள், இவர்கள் மூடர்கள் என்பது சாமுவைய்யர் கொள்கை. அன்னதானத்தைவிட வேறு சிலாக்கியமான தானமில்லை என்றும் அதனாற்றான் நல்ல பெயர் என்றும் கொடுக்கிறவன் வயிறுகுளிர சாப்பிட்டுவிட்டுப் போனால் ஒருவாறு நாம் ஏராளமாயிவருக்குக் கொடுத்தோமே என்று வயிறு எரியாமலிருப்பான் என்றும் இவருடையது கொள்கை. வெகு கெட்டிக்காரர் சாமுவைய்யராகையால் தனக்கு எவ்விதமாய் போசனமோ அதேமாதிரி தன் பந்தியில் ஒவ்வொருவனுக்கும் ஏற்ற வித்தியாசமில்லாமலளிப்பார். ஏதாவது தனக்குக் குறைந்தாலும், அவர் கோபிக்கார்: தன்னுடன் சாப்பிடப்பட்டவர்கள் மட்டில் தங்களுக்குபட்சபாதமாய் ஊண் அளித்ததாக வாயைவிட்டு அவர்கள் ஒருநாளும் சொல்லமாட்டார்கள் என்றாலும் மனதிலாவது எண்ணிவிடக்கூடாதென்பது அவருடைய முக்கிய சாக்கிரதை. அதேமாதிரி அவர் காலம்சென்று வந்தது. என்னதான் அவர் வாங்குகிறவர் என்று பெயராகவிருந்தாலும் அவருக்குக்கொடுத்தோமே என்று ஒருவனாவது மனவருத்தப்பட்டதேயில்லை. இன்னுமதிகமாகக்கொடுத்தே வந்தான். அவர் எப்பொழுதும் சுகி சுகிதான். தன்னுடன் 10 விருந்தாளில்லாமல் அவர் புசித்ததினமே கிடையாது. எவ்வளவு சம்பாதித்தும் தன் கையில் ஒரு காசுகூட மிகுந்ததாக வைத்துக் கொள்ளாமல் தனது பந்துவர்க்கங்களுக்கு வாரிக்கொடுத்தார்.

வருஷத்தின் மற்றகாலங்களில் சூரியனுடைய பாதையானது ஆகாயத்தின் நேர் மத்தியிலில்லாமல் சற்று வடதிசையிலாவது சற்று தென்திசையிலாவது ஒதுங்கியிருக்கும். மார்ச்சி மாதம் 21-ந்தேதிக்கு பிற்பாடு நாளுக்குநாள் வடதிக்கிலேயே ஒதுங்கிக்கொண்டுவந்து ஜூன்மாதம் 21-தேதியில் சூரியமார்க்கமானது அதிகமாய் வடதிசையில் சாய்ந்து இருப்பதாய் காணப்படும். ஜூன்மாதம் 21-ந்தேதிமுதல் செப்டம்பர் மாதம் 21-ந்தேதிவரை கொஞ்சங்கொஞ்சமாய் தென்திசையிலொதுங்கி கடைசியாய் செப்டம்பர் மாதம் 21-ந்தேதியில் தன்னுடைய பழையமார்க்கத்தை அதாவது ஆகாயத்தில் மத்தியமார்க்கத்தையேவந்து சேர்ந்தாற்போல் காணும். ஆனால் இந்த நடுமார்க்கத்தில் நெடுங்காலமிருக்கிறதில்லை. அதின் மறுநாளே சூரியன் தென்திசையில் சாய்வதாய் காணப்படும்; நாளாவிர்த்தியில் தென்திசையிலேயே அதிகமாய்ச் சாய்ந்து கொண்டுவருவதுபோல் தோன்றி கடைசியில் அதாவது டிசம்பர் மாதத்தின் 21-ந் தேதியின் பிறகு சூரியன் மறுபடியும் தன்னுடையபழையபாதையிலேயே அதாவது ஆகாயத்தின் நேர்மத்தியில் வருவதுபோல் காணப்படுகிறது. உத்தராயணம் தக்ஷிணயணம் என்ற பேதங்கள் சூரியனுடைய மேற்சொன்ன மார்க்க பேதங்களையே குறிக்கின்றன. ஆனால் நிசமாய் நாம் மேலே சொன்னபிரகாரம் சூரியன் அப்படி திரும்புகிறதென்பதும் அப்போதைக்கப்போது தன்னுடைய மார்க்கத்தை மாற்றுகிறதென்பதும் அல்ல. பூமியே சூரியனைச்சுற்றிவரும்போது நேராக திரும்பாமல் மார்ச்சிமாதம் 21-ந் தேதிக்கு பிற்பாடு நாளுக்குநாள் உத்தரமேருவை சூரியனைநோக்கிச் சாய்த்துக்கொண்டும் ஜூன்மாதம் 21-ந் தேதியன்று மேற்சொன்னஉத்தரமேருவின்சாய்வு அதிக்கிரமித்து இதன் பிறகு திரும்பி மெள்ள மெள்ள மத்தியமார்க்கத்துக்குவர ஆரம்பித்து செப்டம்பர் மாதம் 21-ந் தேதியில் உத்தரமேரு நேர்மேலாகவும் தக்ஷிணமேரு நேர்கீழாகவும் ஆகி அதின் பிறகு தக்ஷிணமேருவை அதேமாதிரியாய் கொஞ்சங் கொஞ்சமாய் சூரியனை நோக்கிச்சாய்ந்து டிசம்பர்மாதம் 21ந்தேதியில் தக்ஷிணமேருவை சூரியனைநோக்கி அதிகமாயச் சாய்ந்துக்கொண்டிருந்து அதன் பிறகு மெள்ள மெள்ள திருப்பி பழைய நிலையிலேயேவந்து மார்ச்சிமாதம் 21-ந் தேதியில் மேருகளை எந்ததிசையிலும் சாயாமல் நேர் வடக்கும் தெற்குமாய் நிற்கும்.



இந்த எல்லாவிஷயங்களும் இங்குவரைந்திருக்கும் சித்திரப்படத்தால தெளிவாகும். இந்தச் சித்திரப்படத்தில் சூரியகிரணங்கள் படும் இடங்களை வெள்ளையாயும் சூரியகிரணங்கள் படாத இடங்களை கருப்பாயும் காட்டியிருக்கிறது. மேலும் மார்ச்சிமாதம் முதல் செப்டம்பர் மாதம்வரை உத்தரமேரு சூரியனால் பிரகாசிக்கப்பட்டு மீதி ஆறுமாதங்களில் சூரியனின்றும் மறைந்து தக்ஷணமேரு சூரியகிரணங்களுக்கு எதிராகவிருக்கும் என்பது இதனால்விளங்குகின்றது.

☞ இது சென்னை ப்ரிசிடென்ஸி காலேஜ் பூமிசாஸ்திரப் புலவரும் போதகருமான மிஸ்டர் எச். நாராயண ராவு **M A. F. G. S.** அவர்களால் கன்னடத்தில் எழுதப்பட்டு அதே காலேஜில் ரசாயன சாஸ்திரப் புலவ்ரும் உதவி போதகருமான மிஸ்டர் **T. K.** ஹனுமந்தராவு பி. ஏ., அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுளது. இனி இவ்விஷயம் சித்திரப்படத்துடன் நமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். [ப.ர்.]

## புற்புலத்து நெட்டிலிங்கமையர் வைபவம்

149-வது பக்கத்தொடர்ச்சி.

உத்தியோகஸ்தன் வீட்டில் அக்காலத்தில் ஒரு கல்யாணம் ஏதாவது வந்துவிட்டால் அந்த உத்தியோகஸ்தனுக்கு தன்கைக்காசு செலவில்லாமல் எல்லாக் காரியமும் வெகு அழகாயும் டம்பமாயும் நிறைவேறி முதல் மூவாயிர ரூபாயும், மிளகாய்வற்றல் முதல் வீட்டுக்கு மூன்று வருஷத்திய சாமான்களும் மிகுந்துவிடும். யஜமான் வீட்டில் கல்யாணம் என்று ஒவ்வொருமிராசுதார்களும், நெல்லோ, அரிசியோ, நெய்யோ தயிரோ, காயோ கறியோ, பணமோ புடவையோ, நகையோ பாத்திரமோ, கொண்டுவந்து கொட்டுவார்கள். அவ்வுத்தியோகஸ்தர்கள் ஸம்சாரங்களும் என்னவந்தாலும், இன்னும் அதில்லை இதில்லை என்று சொல்லி எப்படியாவது வந்த மட்டும் விடாமல் வரப்பற்றுவதிலேயே லட்சியமாயிருப்பார்களே யன்றி வந்தது போதும் என்ற திருப்திமட்டும் கிடையவேகிடையாது. அந்த நாள் உத்தியோகஸ்தர்கள் சம்பாத்தியம் அரைக்கால் அவர்களுடைய சமத்காரமான மனையாட்டிகள் மூலமாய் சம்பாத்யம் முக்காலே அரைக்கால். இவ்வளவு செய்தும் புகாராவே யிருக்காது. கோள்மனுமுகலியது போய் ஏதாவது சோதனை என்று வந்தால் வந்த சாமான் அவ்வளவுக்கும் வாங்கினதாக ரசீது கொடுத்துவிடுவார்கள் அல்லது மேலதிகாரிகளை எப்படியாவது அவன் வாய்க்குக் கொஞ்சமோ ஜாஸ்தியோ சம்பாத்தியத்துக்குத் தக்கபடி பூட்டுப்போட்டு சரிப்படுத்திக்கொள்ளுவார்கள்.

இவ்வளவுதூரம் நாம் சொன்னது அக்காலத்தின் உத்தியோகத்தின் அபாரசம்பாத்யத்தை எடுத்துக்காட்டியபடி. எல்லாவிதத்திலும் கெட்டிக்